**MC.No. 2/2021**
**date: 06-10-2021**

**ம.சா.1 லாவண்யா க/பெ. செல்வதுரை (எ) நாகராஜ்**

**குறுக்கு விசாரணை-**

எனக்கும் எதிர்மனுதாரருக்கும் 11.03.2016ம் அன்று திருமணம் நடந்தது. தற்போது எனக்கு ஒரு குழந்தை மட்டுமே உள்ளது. 2வது குழந்தை பிறக்கவில்லை. எனக்கு 2வது குழந்தை உள்ளது பெயர் லிவியா, 2 வயதாகிறது என்றாலும் சரியல்ல. கடந்த 06/12/2018 அன்று நான் காணாமல் போய்விட்டதாக என் கணவர் கவரபேட்டை காவல்நிலையத்தில் புகார் அளித்தது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அப்போது நான் என் அம்மா வீட்டில் இருந்தேன். பின்னர் என்னை என் அம்மா காவல் நிலையத்திறல் இருந்து என்னை அழைத்து வந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி விசாரணையில் நான் சுமன்ராஜ் என்பவரை காதலித்து வருவதாகவும் தற்போதும் அவருடன் செல்லப்போவதாக நான் போலிசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலைய விசாரணையின் போது 06/12/2018 ல் நான் எண்.202, பெருமாள் கோயில் தெரு, புதுவாயில் காலனியில வசித்து வந்ததாக உள்ளது என்றாலும் அதில் என் தொலைபேசி எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். மேற்படி கடிதத்தில் பெறுநராக காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் ஈ4 கவரபேட்டை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கடிதத்தில் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லாமல் 13/11/ 2018 6.30 மணிக்கு சுமன்ராஜ் உடன் என் விருப்பப்படி செல்வதாகவும் குழந்தையை உடன் அழைத்துச்செல்வதாகவும் மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 06/12/2018 அன்றே 3 சவரன் தாலி சரடு, மெட்டி 4, கொலுசு 2, ஆகியவற்றை காவல் நிலையத்தில் என் கணவரிடம் கொடுத்தேனா என்றால் என் கணவரே என்னிடம் இருந்து பிடுங்கிக்கொண்டார். எதிர்மனுதாரர் நான் 5 சவரன் நகைகளை திருடி சென்றதாக கா.நி என் மீது புகார் அளித்திருந்தார். அதற்காக நான் அன்று காவல் நிலையத்திற்கு சென்றேன். காவல் நிலையத்தில் நான் Mutual consent divorce கொடுப்பதாக சொன்னேனா என்றால் என் கணவர் மற்றும் அவர் குடும்பத்தார் தான் அவ்வாறு சொன்னார்கள் நான் விவாகரத்து கொடுக்க முடியாது என்று சொன்னேன். என் திருமணத்தின் போது ரூ.16 லட்சம் செலவு செய்ததாகவும், 20 சவரன் தங்க நகைகள் போட்டதாகவும் மனுவில் நான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் அவை எதிர்மனுதாரரிடம் தான் உள்ளது. எனக்கு கொடுக்கப்பட்ட் சீதன பொருட்களின் விவரங்கள் மற்றும் அதன் விலை குறித்து தனிதனியாக என்னால் தற்போது கூற முடியுமா என்றால் கூறமுடியாது. மேற்படி திருமணத்திற்கு நாங்கள் செலவுசெய்த ரூ.16 லட்சம் எந்த வங்கியில் எப்போது எடுத்து கொடுக்கப்பட்டது என்றாலும், யாரிடம் கடன் வாங்கி செலவு செய்தோம் என்று தற்போது கூற முடியுமா என்றால் கூறமுடியாது. எச்எம்ஓபி. 302/2019 விவாகரத்து வழக்கை எதிர்மனுதாரர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து தற்போது அது நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான. மேற்படி வழக்கில் சுமன்ராஜ் 2ம் எதிர்மனுதாரராக உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தற்போது சுமன்ராஜ் உடன் வசித்து வருகிறேன் என்றாலும் அதன் மூலமாக எனக்கு 2 வயதுள்ள பெண் குழந்தை உள்ளது என்றாலும் சரியல்ல. நான் தற்போது என் அம்மா வீட்டில் தான் வசித்து வருகிறேன். நான் திருமணத்திற்கு பின்பு கல்லூரியில் பிஎஸ்சி பயோடெக்னாலஜி படிப்பை தொடர்ந்தேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என் மீது உள்ள நம்பிக்கையின் பேரில்தான் திருமணத்திற்கு பின்பும் என்னை கல்லூரிக்கு அனுப்பினார் என்றாலும் எனக்கு சுமன்ராஜ் என்பவருடன் கல்லூரியின் ஆரம்காலத்தில் இருந்த காதலை நான் திருமணத்திற்கு பின்பும் தொடர்ந்தேன் என்றாலும் சரியல்ல.

கவரபேட்டை காவல் நிலையத்தில் இருந்து என் தாய் என்னை அழைத்து வந்தபோது நான் காதலித்த சுமன்ராஜ் என்பவருடன் தான் செல்வேன் என்று கூறி அதனை காவல் நிலையத்தில் எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் என் முதல் குழந்தை யாழிசை எதிர்மனுதாரருக்கு திருமணம் நடந்து பிறக்கவில்லை என்று கூறி சுமன்ராஜ்க்கும் எனக்கும் பிற்நததாக கூறி குழந்தையை என்னுடன் அழைத்துச்சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. என் குழந்தை எதிர்மனுதாரருக்கு பிறக்கவில்லை என்றாலும் தற்போது நீதிமன்றத்தில் அவர் குழந்தை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் குழந்தை எனக்கும் எதிர்மனுதாரருக்கும் தான் பிறந்தது. 2020ம் ஆண்டு திருவள்ளுர் மாவட்ட சமூக நல அலுவலர் மகளிர் சிறப்பு பிரிவில் நான் ஒரு புகார் அளித்து சீதன பொருட்களை எதிர்மனுதாரர் திருப்பி தரகேட்டு விண்ணப்பித்து இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி ஆணையத்தில் நான் திருமணத்தின்போது 4 சவரன் நகைகள் மட்டுமே போட்டு வந்தேன் என்றும் சீதன பொருட்கள் உபயோக படுத்தும் நிலையில் இல்லாமல் அழிந்துவிட்டதாகவும் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு இருந்தார் என்றால் சரியல்ல. மேற்படி சீதன பொருட்கள் எனக்கு திரும்ப கிடைக்காத காரணத்தினால் தான் இந்த ஜுவனாம்ச வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எனக்கும் சுமன்ராஜ் என்பவருக்கும் ல்விய என்ற பெண் குழந்தை பிறந்து தற்போது 2 வயது ஆகிறது என்றாலும் தற்போது நான் சுமன்ராஜுடன் குடும்பம் நடத்துகிறேன் என்றாலும் 06/12/2018 கடிதத்தின் உண்மை தன்மை அறிய கவரபேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளரை விசாரிக்க எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை.

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் கு.வி ஒத்திவைக்கப்பட்டது)